ஒட்டுமொத்தமாக விளக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும், அரசு மருத்துவமனையாக இருந்தாலும், இதுவரை எடுத்துக்கொண்டால் பணியாளர்களை நியமிக்க உலக வங்கியின் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் எல்லாம் 30 படுக்கைகள், 50 படுக்கைகள், 100 படுக்கைகள், 150 படுக்கைகள், 500 படுக்கைகள் என்று மாற்றி, அங்கே இருக்கக்கூடிய மக்கள்தொகையின் அடிப்படையில் மருத்துவர்களையும், செவிலியர்களையும் நியமிப்பதற்கு உலக வங்கியின் நிதி கூடிய விரைவில் ஜனவரி மாதம் கிடைக்கும். முதலாவதாக 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். இருக்கக்கூடிய மருத்துவமனைகள் அத்தனையும் தரம் உயர்த்தப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது நீங்களும் நீண்ட நாள் உறுப்பினர், நானும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன் என்று பதில் சொன்னார். அதற்காக அவருக்கு நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்பது ஒரு மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், கேள்விக்கு வாருங்கள். கேள்வி நேரத்தைப் பற்றி விவாதம் இல்லை.

வினா எண் 46, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

46—

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

கோரைப்பாய் தொழில்

***13121—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதியில் தமிழ்நாட்டிலேயே கோரைப்பாய் பின்னும் தொழில் அதிகமாக நடைபெறுவதால், அங்கு கோரைப்பாய் தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?

2004 நவம்பர் 19]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணி போற்றும் தங்கத் தாரகையாம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி, 2003 ஆம் ஆண்டு கூட்டத் தொடரில் இந்த மாமன்றத்திலே என்னுடைய தொகுதியான முசிறி பேரூராட்சியில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தை இயக்கிட மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தங்களின் வாயிலாக கோரிக்கை வைத்தேன். உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வழங்கி தற்போது பேருந்து நிலையம் இயங்கிவருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதியில் அடங்கிய பல்வேறு கிராமங்களில் கோரைப்பாய் பின்னும் தொழில் குடிசைத் தொழிலாக நடைபெற்று வருகிறது. இத்தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற மிகவும் சாதாரண ஏழை மக்கள். இவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அரசு மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், முசிறி தொகுதியில் அடுத்த ஆண்டாவது கோரைப்பாய் பின்னும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாட்டிலேயே முசிறி தொகுதியில்தான் கோரைப்பாய் தொழில் அதிகமாக உள்ளதால் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தனியாக தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்படி, கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படுத்தப்படும் அனைத்துத் தொழில்களுக்கும் முன்னுரிமை அளித்து வாரியம் செயல்பட்டு வருகிறது. ஆனால் கோரைப்பாய் செய்யும் தொழில், கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் வருவதால், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையக் குழுவால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அந்தத்

தொழில்கள்தான் செய்ய வேண்டுமென்கிற திட்டத்தினை மாற்றியமைத்த பிறகு, கடன் மற்றும் மானியம் எந்தவொரு தொழிலுக்கும் வழங்குவதில்லை. கதர் கிராமத் தொழில் ஆணையக் குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமத் தொழில்களுக்கு விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டம், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செயல்பட்டு வருகிறது. கதர் கிராமத் தொழில் திட்டத்தின்கீழ், ஆர்வமுள்ள தனி நபர்கள் கூட்டாகச் சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்து, அதன்மூலம் பாய் உற்பத்தி செய்திட தேவைப்படும் மூலதனத்தை நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் கடனாகப் பெறுவதற்கு முசிறி தொகுதியிலே இருக்கக்கூடியவர்கள் முன்வந்தால், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் நிச்சயமாக தொழிற்சாலை அமைவதற்கு வாரியம் உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரை பயிரிடும் விவசாயிகளுக்கும் மற்றும் கோரைப்பாய் பின்னும் உற்பத்தியாளர்களுக்கும் கடன் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அப்படியிருப்பின், எவ்வளவு பேர் பயன் பெற்றுள்ளார்கள் என அறிய விரும்புகிறேன். விளிம்புத் தொகை வழங்கும் திட்டம் எந்தெந்தத் தொழில்களுக்கு எவ்வளவு கொடுக்கப்படுகின்றது என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் வரையறுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி கிராமிய கைவினைஞர்களுக்கு உதவும் வகையில், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், விளிம்புத் தொகைத் திட்டம் என்னும் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், கிராமப்புறங்களில் தொழில் தொடங்கிட தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் அதிகபட்சமாக 30 சதவீதம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் அடையாளம் கண்டுள்ள 119 கிராமத் தொழில்கள் இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற தகுதி உடையனவாகும். இந்தத் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களிலுள்ள 1,120 பயனாளிகளுக்கு இதுவரை 474.60 இலட்சம் ரூபாய் விளிம்புத் தொகை மானியமாக வாரியத்தினால் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2004 நவம்பர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரைப்பாய் என்பது மனிதனுடைய உடலுக்கு மிகத் தேவையானது. விஞ்ஞானபூர்வமாகவும், கோரைப்பாயில் படுத்தால் மனிதனுடைய இரத்த ஓட்டம் சீராகும் என்பதுடன், ஒரு நோய் நொடியில்லாமல், பொதுவாக ஹார்ட் அட்டாக்கே வராமலிருப்பதற்கு கோரைப்பாயில் படுப்பது நல்லது என்றுகூட மருத்துவர்கள் சான்றிதழ் அளிக்கிறார்கள். அதேமாதிரி, கோரைப்பாய் என்று சொன்னால், காரமடைப் பாய் என்பது தமிழ்நாட்டிலேயே, மிக உயர்ந்த பாய். அந்தப் பாய் இன்றைக்கு உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, பத்தமடை (குறுக்கீடு) பத்தமடை.

திரு. ஜி. பழனிசாமி: பத்தமடை, காரமடை இரண்டு இடங்களிலும் தயாரிக்கிறார்கள். இரண்டு பாய்களுமே அநேகமாகப் பார்த்தோமானால், ஒரு பாயினுடைய விலை 5,000 ரூபாயைத் தாண்டி விற்பனை செய்யப்படுகிறது. ஆகையாலே பாய் தொழில் பண்ணுவதற்கு அரசு 50 சதவீதம் மானியம் கொடுத்து, சுயஉதவிக் குழுக்களுக்கு ஊக்கம் அளித்தால் மாற்றுத் தொழிலுக்கு ஒரு வாய்ப்பிருக்கும். இதை சமூக நலத் துறை மூலமாகச் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சொந்தமாக கோரை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பணியை மேற்கொள்ளவில்லை. மாறாக, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உற்பத்தி செய்கின்ற கோரைப்பாய்களை விற்பனை செய்வதற்கான வழிமுறைகளை மட்டும்தான் வாரியம் வகுத்துத் தருகிறது. யாராவது கோரைப்பாய் தொழில் செய்யக்கூடியவர்கள் தனி நபர்களாகக் கூட்டுச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவீர்கள் என்று சொன்னால், வாரியம் மானியம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(அ) தேசிய ஒருமைப்பாடு தின உறுதிமொழி—பேரவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பெறுதல்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேசிய ஒருமைப்பாடு தினத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலக பிரதான கட்டடத்திற்கு அருகேயுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் உறுதிமொழி செய்து வைக்க ஏதுவாக பேரவை தற்போது ஒத்திவைக்கப்படுகின்றது.

பேரவை மீண்டும் முற்பகல் 11-15 மணிக்குக் கூடி எஞ்சிய அலுவல்களை மேற்கொள்ளும்.

பின்னர், பேரவை முற்பகல் 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 11-15 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. காவிரி டெல்டா பகுதிகளில் கால்வாய்களைத் தூர் வாராததால்...

திரு. ஜி.கே. மணி: முக்கியமான பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து...

திரு. மு.பெ. சாமிநாதன்: கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.